**சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 71,748,242 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 39,511,442 மீதி கப்பல் கம்பனி மற்றும் இணைக்கப்பட்ட 84 களஞ்சியங்களில் இருந்து அறவிட வேண்டிய மீதியாக | கடன்பட்டோர் மீதி, கப்பல் கம்பனி / கப்பல் முகவர் நிறுவனங்களிலிருந்து தமது பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் பெறப்படுகின்ற மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் பெறப்படுவதாக இருந்ததுடன் | திணைக்களம் கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் அந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களிலிருந்து மீதி உறுதிப்படுத்தல் கடிதம் பெறப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அநேகமாக இந்த பெறுமதி மாற்றமடைகின்றது. இதன் காரணமாக உரிய நிறுவனங்களிலிருந்து மீதி உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | மேலதிக நேர வருமானம் சேகரிக்கின்ற நிலையங்களுக்காக மேலதிக நேர வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்ட மேலதிக நேர மணித்தியாலம் மற்றும் நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பாக உரிய நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாடொன்றை உள்ளடக்கிய உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மேலதிக நேர வருமானம் சேகரிக்கின்ற இடங்களுக்காக சேவைகளை வழங்குகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறித்துரைத்தபடி இல்லாதிருந்ததுடன் சேவைத் தேவையின் அடிப்படையில் ஈடுபடுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் ஈடுபடுத்தப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது. செலுத்தப்படுகின்ற விலை வீதம் தீர்மானிக்கப்படுவது 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் என்பதை குறிப்பிடுகின்றோம். | உரிய நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 ஏனைய அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1967 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 75 நிறுவனங்களினால் இலங்கை சுங்கத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 253,314 தொகை வெளி முதலீடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் | ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் உரிய 75 நிறுவனங்களில் தற்போது 11 நிறுவனங்களின் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தை விடுவித்தல் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதில் சமர்ப்பித்த 03 | தற்போது சேவை வழங்கல் மற்றும் நிறுவனங்களின் இருப்பு தொடர்பாக விசாரணை செய்து சரியான கணக்கு வைத்தலோ அல்லது தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | உழைக்க கூடியதாக இருந்த வட்டி வருமானம் ரூபா 14,181,228 உடன் ஒட்டுமொத்த முதலீடு ரூபா 14,434,542 ஆகும். இந்த நிறுவனங்களின் இருப்பு தொடர்பாகவும், தற்போது சேவை வழங்குதல் தொடர்பாகவும் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளப்படாமல் உரிய மீதி பொறுப்புக்கள் மற்றும் முதலீடுகளின் கீழ் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | நிறுவனங்களுக்குரிய சேமிப்பு வங்கியின் 04 பாஸ் புத்தகங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது. மிகுதி நிறுவனங்கள் தொடர்பாகவும் வைப்புக்களை விடுவிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளோ எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் கடன்பட்டோர் மீதி ரூபா 8,230,180 இனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது நடப்பாண்டின் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதிய மீதியில் சீராக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அதிகரித்து காண்பிக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்காக முறையான சான்றுகளோ அல்லது மூலஆவணங்களோ சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீதி சீராக்கம் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | முன்னைய ஆண்டின் கடன்பட்டோர் மீதி ரூபா 8,230,180 இனால் மிகை மதிப்பீடு செய்வதற்கு காரணமான விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.<br>• ஒரு நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய பணம் இரண்டு தடவை பதியப்பட்டமை<br>• நிறுவனத்தால் இந்த அலுவலகத்திற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட காசோலைகளில் குறிப்பிடப்பட்ட தாமத வழுவினாலும், அந்த பணம் தொடர்ந்தும் கிடைக்க வேண்டிய கடனாக குறிப்பிடப்பட்டமை<br>எதிர்காலத்தில் இவ்வாறான பதிவுகள் நாட்குறிப்பு மூலம் கணக்கு வைக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | மீதிகளை உறுதிப்படுத்து வதற்காக முறையான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் சரியான பிரகாரம் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கணக்குகளை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 71,748,242 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 15,478,888 மீதி ஒரு வருடத்தை விஞ்சி காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குவதுடன் கணக்குகள் தயாரிக்கும் போது ஏற்பட்ட தாமத வழுவாக இருந்ததை குறிப்பிடுவதுடன் | கணக்குகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அதில் 25 நிறுவனங்களுக்குரிய ரூபா 4,732,663 மீதியொன்று 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாற்றமின்றி காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்படாத போதும் 2021 இன் இறுதிக் கணக்கில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கிடைக்க வேண்டியதாக குறிப்பிடப்பட்ட மீதி ரூபா 2,302,179 ஆகும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 3/2017 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை | சகல அரசாங்க ஊழியர்களும் தமது வருகை மற்றும் வெளிச்செல்லுகைகளை குறிப்பிடுவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை சுங்கத்தில் சேவையாற்றுகின்ற அரசாங்கத்தின் உத்தியோகத்தர்கள் எவரும் அந்த தேவையினை நிறைவேற்றாதிருக்கும் போது மீளாய்வாண்டிற்காக ரூபா 948,323,405 தொகை மேலதிக நேரப்படியாக செலுத்தப்பட்டிருந்தது. | சுங்கத் திணைக்களத்தின் கடமை தன்மையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தும் போது எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக விளக்கமளித்து அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு 2022.01.25 ஆந் திகதி கடிதம் மூலம் ஆலோசனை வழங்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் அந்த ஆலோசனை கிடைத்ததன் பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சுங்கத் திணைக்களத்தின் மேலதிகநேர கொடுப்பனவுகள் தொடர்பாக பரிந்துரை சமர்ப்பிப்பதற்காக 2022.02.14 ஆந் திகதி சுங்கத்தின் சகல உத்தியோகத்தர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் பரிந்துரை கிடைத்ததன் | பொதுத் துறையின் சகல உத்தியோகத்தர் களுக்கும் உரிய பொது சுற்றறிக்கையின் பிரகாரம் சுங்கப் பதவியணியினரும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பின்னர் மேலதிக நேர கொடுப்பனவுகள் தொடர்பாக முறையான திட்ட முறைமையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 876(2)(இ) பந்தி | மேலதிக நேர நிதியத்தில் திறைசேரி நிதியமாக ரூபா 1,948,778,712 தொகை நீண்டகாலம் முதல் திரண்டு காணப்பட்டிருந்த போதிலும், ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரியுடன் கலந்துரையாடி அந்த மிகைப் பணத்தை மீளாய்வாண்டின் போதும் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்கில் பெயரளவில் காணப்படுகின்ற 2021.12.31 இல் உள்ளவாறான மீதியான ரூபா 1,948,778,712 திரண்ட தொகை மிகைப் பணமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த மீதி பௌதீகரீதியில் திணைக்களத்தின் கணக்கில் காணப்படாதிருந்ததுடன் காணப்படுகின்ற முறைமையின் பிரகாரம் தற்போதும் திறைசேரி பிரதி செயலாளரின் வங்கிக் கணக்கு (ஒன்றிணைந்த நிதியம்) இற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் திரண்டு காணப்படுகின்ற மிகைப் பணத்தை திறைசேரியுடன் கலந்துரையாடி ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 176,966,439 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 141,774,897 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 35,191,542 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மேலதிகநேர கொடுப்பனவு செலவினம் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்கான மேலதிக நேர வருமானமாக ரூபா 854,372,907 சேகரிக்கப்பட்டிருந்தது. திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு மற்றும் கடன்பட்டோருக்கான ஒதுக்கீடுகள் சீராக்கப்பட்டதன் பின்னர் நிதியத்தின் தேறிய செலவினம் ரூபா 945,599,889 | நிதியமைச்சின் செயலாளரின் 2004.02.09 ஆம் திகதிய மு1/சுங்கம்/47/3 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இலங்கை சுங்க திணைக்களத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் மேலதிகநேர படியை கணிப்பிடுதல் தாபன | உரிய நிதியத்தின் பெறுவனவுகளை விஞ்சி கொடுப்பனவு செய்தல் தொடர்பாக முகாமைத்துவம் அதிக கவனம் செலுத்தி மேலதிக நேர கொடுப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் மேலதிக நேர நிதியதிதின் பற்றாக்குறை ரூபா 176,966,439 ஆக இருந்ததுடன் அந்த பற்றாக்குறையினை தீர்ப்பதற்காக முன்னைய ஆண்டில் நிதியத்தில் காணப்பட்ட திரண்ட மீதி பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த பற்றாக்குறை ஏற்பட்டது தொடர்பில் 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் மணித்தியாலயத்திற்கு செலுத்தப்படுகின்ற மேலதிகநேர கொடுப்பனவுகள் 50 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக இருந்தது. மேலதிக நேர வீதத்தை உயர்த்துவதற்கும் மற்றும் மேலதிக நேரப்படி செலுத்த வேண்டிய புதிய தரப்பினரை உள்ளடக்குவதற்கும் திணைக்களத்தின் உள்ளகக் குழுவினால் முறையற்ற தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் இதற்காக குறித்துரைத்த செல்லுபடியான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 உப பிரிவின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகரிக்கப்பட்ட மணித்தியால வீதமாக மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தில் 240 அலகாகும். எனினும் இந்த திணைக்களத்தில் இதுவரை கணிப்பிடப்படுகின்ற மணித்தியால வீதம் தற்போதைய சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படாதிருந்ததுடன் 2004 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறான ஒன்றிணைந்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டாகும். நீண்ட காலம் முதல் குறைந்த வீதத்தின் கீழ் பல்வேறு சேவை நிலையங்களில் ஆகக்குறைந்த வசதிகளின் கீழ் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களையும் வருகையினையும் கவனத்தில் கொண்டு மேலதிக நேர வீதம் அதிகரிக்கப்பட்ட போதிலும் நிதியமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்து அவர்களுக்கு உரித்தான மணித்தியால வீதத்தை விட மிகவும் குறைந்த வீதத்திலேயே தற்போது உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகிறது என்பதை குறிப்பிடுகின்றோம். | செயன்முறைகளை முறைமைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் பற்றாக்குறை கடந்த ஆண்டினை விட ரூபா 35,191,543 இனால் அதிகரித்திருந்ததுடன் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக திரண்ட நிதியத்தை ஈடுபடுத்தும் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு முதல் திரண்ட நிதியத்தின் மீதி படிப்படியாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | திரண்ட நிதியத்தின் மீதி படிப்படியாக வீழ்ச்சியடைதல் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,331,074,672 ஆக காணப்பட்ட திரண்ட நிதியத்தின் மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,948,778,712 வரை குறைவடைந்திருந்தது. | | |
| (இ) | திணைக்களத்தின் மேலதிக நேர வருமானத்தை இனங்காணும் போது வருமானம் சேகரிக்கின்ற நிலையங்களுக்கான வருமானம் தனித்தனியாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் வருமானம் சேகரிக்கப்படுகின்ற நிலையங்களுக்கான மேலதிக நேர செலவினம் தனித்தனியாக இனங்காணப் பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேலதிக நேர சேவை வழங்குகின்ற நிலையங்களுக்காக மேலதிக நேர கொடுப்பனவுகளை இனங்காண்பதற்கான முறைமையொன்று திணைக்களத்திடம் காணப்படாதிருந்ததுடன் மேலதிக நேர கொடுப்பனவுகளின் பெறுமதியை மாதாந்தம் இனங்காணல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் தேவையின் பிரகாரம் வருமானம் சேகரித்தல் 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் மேற்கொள்ளப் படுகின்றது.<br><br>சுங்க திணைக்களத்தில் காணப்படுகின்ற பணிப் பொறுப்புக்களின் பிரகாரம் வருமானம் அறவிடக்கூடிய மற்றும் அறவிட முடியாத நிலையங்களினதும் சேவை தேவையின் அடிப்படையில் 24 மணித்தியாலம் முழுவதும் உத்தியோகததர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் சுங்கத் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 2342 உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக நேரம் தயாரித்தல் கணக்குப் பிரிவில் 12 உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் மேலதிகநேர படியை கணிப்பிடும் வசதிக்காக உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர்களின் பிரகாரம் உரிய ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றோம். | மேலதிக நேர கொடுப்பனவுகளை இனங்காண்பதற்காக சரியான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 103 ஆம் பிரிவின் பிரமாணத்தின் பிரகாரம் சுங்க உத்தியோகத்தர்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட பொதுவான | சுங்க கட்டளைச் சட்டத்தில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் ‘‘சுங்க நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற நபர்கள் அந்த சேவையில் | சுங்க உத்தியோகத்தர்கள் மேலதிக நேர வேலையில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கின்ற பணத்தை |

கடமை நேரங்களுக்கு புறம்பான நேரங்களிலோ அல்லது கடமைகளுக்காக சுங்கம் மூடப்பட்டுள்ள தினங்களிலோ அந்த உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகளுக்கான கட்டணம் அல்லது அறவிடல்களாக அறவிடப்படுகின்ற சகல பணமும் மற்றும் எந்தவொரு சுங்க உத்தியோகத்தர்களும் தமக்குரிய அலுவலகத்தில் அல்லது சேவையில் ஈடுபடுகின்ற நிலையங்களில் அல்லது தவிர ஏனைய எந்தவொரு அலுவலகத்திலோ அல்லது நிலையத்திலோ கடமைகளில் ஈடுபடுபட்டதற்காக சேகரிக்கப்படுகின்ற கட்டணம் அல்லது அறவிடல்கள் மேலதிக நேரக் கணக்கிற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் சுங்க உத்தியோகத்தர்களின் மேலதிக நேர வேலையில் ஈடுபடுவதன் மூலம் பெறுகின்ற பணத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும் மேலதிக நேர நிதியத்திற்கு அறவிடப்படுகின்ற மேலதிக நேர வீதம் திருத்தப்படாதிருக்கும் போது செலுத்தப்படுகின்ற மேலதிகநேர வீதம் மாத்திரம் 02 சந்தர்ப்பங்களின் போது திருத்தப்பட்டமை மற்றும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களையும் மேவுகை செய்யும் வகையில் இந்த நிதியத்திலிருந்து மேலதிகநேர கொடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக அவ்வாறு மேலதிக நேர நிதியக் கணக்கின் மீதி மறைப் பெறுமதியை கொண்டிருந்தது. ஈடுபடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களாக கருதப்படுகின்றது.''

அதன் பிரகாரம் திணைக்களத்தின் பணிகளுக்காக நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புபடுகின்ற சகல உத்தியோகத்தர்களுக்கும் மேலதிகநேர படி செலுத்தப்படுவதுடன் ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் மேலதிக நேர நிதியத்திற்கு அறவிடப்படுகின்ற கட்டணத்தை திருத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகின்றோம்.

அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர படியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேலதிக நேர நிதியம் செலுத்துதல் முறையான கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படாதிருந்தமை முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நிலைமையை முறைமைப்படுத்துவதற்காக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கொடுப்பனவுகள் சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வவ்போது சுங்கத் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொள்வதுடன் ஒவ்வொரு உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்ட பிரிவை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டிய மேலதிக நேர மணித்தியால எண்ணிக்கை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள மேலதிக நேர குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. எனினும் சுங்கத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதை வரையறுத்தல் முடியுமாக இருப்பது மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுதை மேலும் குறிப்பிடுகின்றோம். | தற்போதைய மேலதிக நேர கொடுப்பனவு செயன்முறைகளை மீளாய்வு செய்து முறைமைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தை விஞ்சி ரூபா 93,950,498 மேலதிக நேர செலவினமாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 32,434,768 இனால் உயர்வடைந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சுங்க மேலதிக நேரம் மற்றும் கப்பல் சரக்குகள் பரிசோதனை கட்டண வருமானம் வீழ்ச்சியடைந்தமைக்கு பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தன.<br>• கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்ட விமான பயணங்கள் மற்றும் கப்பல் சரக்கு போக்குவரத்து வீழ்ச்சியடைந்த போதும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய கடமைகளில் உரிய சுங்க உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியமை.<br>• நாட்டில் மோசமான | ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த மேலதிக நேர முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நிதியத்தை வழங்குவதில் சுங்கத்தினால் சேவை வழங்குகின்ற வெளி நிறுவனங்களால் ஆகும். அந்த வெளி நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்ற பணத்தை விஞ்சி மேலதிக நேரப் படி செலுத்தாதிருப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| | பொருளாதார நிலைமையின் அடிப்படையில் அவ்வவ்போது மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடு. | வேண்டும். |
| (இ) கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டண கணக்கில் நடப்பாண்டின் வருமானம் ரூபா 51,342,118 இனால் குறைவடைந்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 16.85 சதவீத வீழ்ச்சியாகும். | - மேற்படி - | வருமானத்தை உழைத்தல் சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேலதிகநேர நிதியத்தில் 2021 இன் வருமானமாக ரூபா 1,055,739,250 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உழைக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 854,372,907 ஆனமையின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட உள்ளபடியான வருமானத்தில் ரூபா 201,366,343 பாதகமான முரண் அவதானிக்கப்பட்டது. இது மதிப்பீட்டு செய்யப்பட்ட வருமானத்தில் 19 சதவீத வீழ்ச்சியாகும். அதற்கு பிரதான காரணமாக ‘‘கொழும்பு’’ உப தலைப்பின் கீழான வருமானம் ரூபா 207,450,430 இனால் குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தது. அதன் பிரகாரம் மேலதிக நேர நிதியத்தின் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 165,325 மிகை வருமானமொன்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் விளைவு ரூபா 176,966,439 பற்றாக்குறையாக இருந்தது. | பாதீட்டிற்குரிய மதிப்பீட்டினை தயாரித்தல் முன்னைய ஆண்டின் மூன்றாவது காலாண்டில் மேற்கொள்ளப்படுவதுடன் நடப்பாண்டின் போது உள்ளபடியான வருமானத்தில் முரண்கள் காணப்பட முடியும். 2021 ஆம் ஆண்டின் போது உள்ளபடியான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட வீழ்ச்சியடைவதற்கு பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தது.<br>• கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்ட விமான பயணங்கள் மற்றும் கப்பல் சரக்கு போக்குவரத்து வீழ்ச்சியடைந்த போதும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய கடமைகளில் உரிய சுங்க உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியமை.<br>• நாட்டில் மோசமான பொருளாதார நிலைமையின் அடிப்படையில் அவ்வவ்போது மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடு | பாதீடு சரியான பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |